கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக தங்களிடம் நான் ஏற்கெனவே சட்டப் பேரவை விதி 56-ன்படி கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Next.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன்படி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அது ஆய்வில் இருக்கிறது. *(குறுக்கீடு)* திரு. வே. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் 489 சாயப்பட்டறைகளைச் சேர்ந்தவர்கள் 2-ஆம் தேதி முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, சொல்லுங்கள்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், உபரி ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கி

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 190-க்கும் மேற்பட்ட உபரி ஆசிரியர்களுக்கு ஒன்பது மாதமாக உபரி ஆசிரியர் என்ற காரணத்தால் சம்பளம் வழங்கப்படவில்லை; போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம், பதற்ற நிலை இருக்கிறது. அதைக் கொஞ்சம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

(இ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைதானது

திரு. ஜி.கே. மணி: தருமபுரியில், இலட்சியக் குடும்பங்கள் என்று சொல்லி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம்

இருந்ததாலே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், வழக்கு என்னவென்று சொன்னால்--ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்--நாங்கள் வேண்டாம் என்று சொன்னோம். நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் உண்ணாவிரதம் வேண்டாம்; முதலமைச்சர் அதற்கு அறிவிப்பு செய்திருக்கிறார்கள்; உண்ணாவிரதம் வேண்டாம் என்று சொன்னோம். மீறியும் உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது மருத்துவமனைக்குப் போயும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஆனால் வழக்கு என்னவென்று சொன்னால்--அவர்கள் கடப்பாரை போன்ற ஆயுதங்கள் எல்லாம் எடுத்துக் கொண்டுபோய் பாலத்தில் வெடி வைத்தார்கள், (மணியடிக்கப்பெற்றது) வெடி வைத்து தகர்க்கப் போனார்கள் என்று அவதூறு வழக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சனையில் ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் இந்த அவையிலேயே, 'ஜப்பான் நாட்டின் உறுதுணையோடு அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்' என்றும் சொன்னார். அப்படி ஜப்பான் நாட்டு உதவி கிடைக்கவில்லையென்று சொன்னால், தமிழ்நாடு அரசாங்கமே நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும் என்று சொன்னார். ஆனால், அதையும் மீறி, வேண்டுமென்றே தினந்தோறும் காலையிலே போய் உண்ணாவிரதம் இருப்பது, அவர்களைக் கைது செய்து பிறகு வெளியே கொண்டுபோய் விட்டால் மறுபடியும் மறுநாள் வந்து அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்ட காரணத்தினால்தான் 12 பேரிலே 3 பேர் மருத்துவமனையிலே இருக்கிறவர்களைத் தவிர, மீதி 9 பேரை 15 நாள் ரிமாண்ட் செய்திருக்கிறார்கள். இந்தப் போராட்டங்கள் தேவையில்லாமல் நடக்கின்ற சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி போன்றவர்கள் அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, அதைத் தடுக்க வேண்டும். இந்த அவையைப் பொறுத்தவரையிலே, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் நிச்சயமாக அமல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து மக்கள் வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காகப் போராடுவது முறையல்ல.